# ECHO OF HIS CALL

## அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS


*India's National Spiritual Newspaper*

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

**Vol. XXX** YEAR OF OUR LORD JESUS CHRIST, 2025 SEPTEMBER **No. 09**


## பரிசுத்த வேதாகமம்



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 81:1- 8

1. நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி, யாக்கோபின் தேவனைக் குறித்து ஆர்ப்பரியுங்கள்.
2. தம்புரு வாசித்து, வீணையையும் இனிய ஓசையான சுரமண்டலத்தையும் எடுத்து, சங்கீதம் பாடுங்கள்.
3. மாதப்பிறப்பிலும், நியமித்த காலத்திலும், நம்முடைய பண்டிகை நாட்களிலும், எக்காளம் ஊதுங்கள்.
4. இது இஸ்ரவேலுக்குப் பிரமாணமும், யாக்கோபின் தேவன் விதித்த நியாயமுமாயிருக்கிறது.
5. நாம் அறியாத பாஷையைக் கேட்ட எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுகையில், இதை யோசேப்பிலே சாட்சியாக ஏற்படுத்தினார்.
6. அவன் தோளைச் சுமைக்கு விலக்கினேன்; அவன் கைகள் கூடைக்கு நீங்கலாக்கப்பட்டது.
7. நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய், நான் உன்னைத் தப்புவித்தேன்; இடி முழக்கம் உண்டாகும் மறைவிடத்திலிருந்து உனக்கு உத்தரவு அருளினேன்; மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் உன்னைச் சோதித்து அறிந்தேன்.
8. என் ஜனமே கேள், உனக்குச் சாட்சியிட்டுச் சொல்லுவேன்; இஸ்ரவேலே, நீ எனக்குச் செவிகொடுத்தால் நலமாயிருக்கும்.

# கடினமான நேரங்களிலும் மன உறுதியுடன் இருங்கள்!

## *HOLD FAST & BE COURAGEOUS EVEN IN HARD TIMES!*

சகோதரி ஏஞ்சல்



சில நாட்களுக்கு முன்பு, நான் தானியேல் 3–ம் அதிகாரத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். இந்தப் பகுதியை நான் இதற்கு முன்பு பலமுறை படித்திருந்தாலும், இந்த முறை அது ஆழ்ந்த ஆறுதலையும், உறுதியையும் அளித்தது. அது உங்களுடன் சில சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள வழிவகுத்தது என்று உணர்ந்தேன்.

## எபிரெய சகோதரர்கள்!

தானியேல் 3 ஆம் அதிகாரம் ஒரு வியத்தகு, தீவிரமான காட்சியுடன் தொடங்குகிறது. சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத் நேகோ ஆகிய மூன்று எபிரெய மனிதர்களையும், ராஜா நேபுகாத்நேச்சார் தான் அமைத்த ஒரு தங்கச் சிலையை வணங்கி வரும்படி கட்டளையிடுகிறார். அவர்கள் அவ்வாறு செய்ய மறுத்ததால், அவர்கள் எரியும் சூளையில் போடப்படுகிறார்கள்.

3– ஆம் அதிகாரத்தை ஆழமாக ஆராய்வதற்கு முன், சூழலுக்காக 2– ஆம் அதிகாரத்தை சுருக்கமாகப் பார்ப்பது முக்கியம். அந்த அதிகாரத்தில், ராஜா நேபுகாத்நேச்சார் தன் ஆவி கலங்கும்படியான ஒரு கனவைக் காண்கிறார். அதில் அவர் ஒரு சிலையைக் காண்கிறார். **அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும்**

தொடர்ச்சி 3–ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS



# உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



## OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
Ex MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM., MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.
EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org
YOUTUBE CHANNEL
Echo of His Call

... உன் சத்ருக்களையெல்லாம் உன் முகத்திற்கு முன்பாகத் துரத்திவிடுவதற்கும், நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும், நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக! – உபாகமம் 6:19.

அன்புள்ள நண்பர்களே !

நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள் !

ஊக்கமான ஜெபங்களினாலும், ஓய்வற்ற உழைப்பினாலும், தாராளமான விருப்பக் காணிக்கைகளாலும் தாங்கி, எனக்குப் பின்னணியில் உண்மையாய் நிற்கும் கர்த்தருக்குள் என் அன்பான சகோதர, சகோதரிகள் யாவருக்கும் என் உள்ளத்திலிருந்து நன்றியை உரித்தாக்குகிறேன்.

**உமது சாட்சிகள்மேல் பற்றுதலாயிருக்கிறேன்; கர்த்தாவே, என்னை வெட்கத்திற்குட்படப் பண்ணாதேயும்.** சங்கீதம் 119:31.

'பற்றுதலாயிருத்தல்' என்றால் உறுதியாயிருத்தல், கொள்கைப்பிடிப்புடன் காணப்படுதல் என்று அர்த்தம். தேவன் தமது ஜனங்களுக்குக் கற்பலகைகளைக் கொடுத்து, அவர்களுக்களித்த ஒரே அறிவுரை யாதெனில், அவைகளை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுங்கள் என்பதே. உறுதியான இவ்வித அர்ப்பணிப்பின்றி தேவனளித்த இலக்குகளை அடைய விரும்புவோர் வெற்றியடைய வேறு வழி கிடையாது.

என்னைப் பொறுத்தவரை எனது இளம் வயது முதலே கர்த்தருடைய வார்த்தையைப் பற்றிக் கொண்டு பயணித்து வருகிறேன். ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு வசதியான பாதையல்ல; அதற்குத் தேவை முழு இருதயத்தோடு தன்னார்வமாகக் கர்த்தரைப் பற்றிக்கொண்டு, சார்ந்திருப்பது அவசியமாகும் எனப் புரிந்து கொண்டேன்.

இவை வெறும் வார்த்தைகளல்ல; ஆனால் மிக ஆழமான ஆவிக்குரிய அனுபவத்தைப் பிரதிபலிக்கின்றன. வெயிலோ, மழையோ, காற்றோ, தோல்விகளோ, துரோகங்களோ, தனிமையோ, வியாதியோ, இழப்புகளோ, துன்பங்களோ, பரீட்சைகளோ, சோதனைகளோ, இவையெல்லாவற்றின் மத்தியிலும் கர்த்தருக்குள் நிலைத்திருப்பதை அந்த ஆழமான ஆவிக்குரிய அனுபவங்கள் உள்ளடக்கியுள்ளன.

ஒன்றுக்கொன்று ஒட்டிக்கொண்டிருக்கும் இரு மேற்பரப்புகள் எளிதாகப் பிரிக்கப்பட இயலாதது போல, கிறிஸ்துவுடன் உறுதியாக இணைக்கப்பட்ட நமது வாழ்க்கையும் அவரை விட்டுப் பிரிக்கப்பட இயலாது. நாம் கிறிஸ்துவுடன் உண்மையாகப் பற்றிக் கொண்டிருந்தால், அவர் நமது வாழ்க்கையிலிருந்து ஒரு பிரிக்கப்பட முடியாத பங்காக மாறிவிடுகிறார்.

இதுதான் மணலில் அல்ல, கன்மலையின்மேல் கட்டப்பட்ட வாழ்க்கையாகும்.

வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் நமது சொந்த வாழ்க்கையில் நிறைவேறி வருகிறதை இன்று நாம் காண இயலும். கிறிஸ்து ஜீவனுள்ளவராய் நமது மத்தியில் கிரியை செய்கிறவர் என்று பலதரப்பட்ட மத நம்பிக்கையுள்ள மக்களும் சாட்சி பகர இது வழி வகுக்கும்.

கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கும் உறவு சிலவேளைகளில் நமது வாழ்வினை வனாந்திரம் போன்ற அனுபவங்களுக்குள் நடத்தி பாடுகளையும், உறவுகளில் விரிசல்களையும் கொண்டு வரலாம். **ஆனாலும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்ட நீங்களெல்லாரும் இந்நாள்வரைக்கும் உயிரோடிருக்கிறீர்கள்** என்று உபாகமம் 4:4–ல் வேதம் சொல்லுகிறது. "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்பது நமது வாழ்க்கையின் முக்கிய நோக்கமாக இருப்பதாக. இந்த உறுதியான விசுவாசம்தான் கடினமான நம் வாழ்க்கைப் பாதையில் நம்மை

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ☼ BIBLECOR - Postal Courses (3 languages) ☼ YouTube Ministry ☼ Online Courses ☼ Theological Correspondence Courses (2 languages) ☼ Church Planting ☼ Nehemiah Bible Colleges ☼ Gospel Printing Press ☼ Great Commission Partners ☼ St. Paul's Matriculation School ☼ Crusades ☼ Community Development

ஜெயவீரர்களாகவும், சகல போராட்டங்களையும் மேற்கொள்ள திராணியுள்ளவர்களாகவும், சாதனையாளர்களாகவும் மாற்றும்.''

இந்த உறுதியான அர்ப்பணம் தேவபயத்தில் வேரூன்றி, நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பிரதிபலிக்கட்டும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கொள்ளுங்கள். உங்களது மீதமுள்ள வாழ்க்கைப் பயணம் கனி நிறைந்து, ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களோடு எப்போதும் இருப்பதாக!

**சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.**
1 தெசலோனிக்கேயர் 5:25.


கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியன்,
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org


... 1–ம் பக்கத் தொடர்ச்சி

**வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாய் இருந்தது.** (தானியேல் 2:32–33).



**ராஜா நேபுகாத்நேச்சார் தன் ஆவி கலங்கும்படியான ஒரு கனவைக் காண்கிறார்.**

கனவை விளக்க அழைக்கப்பட்ட தானியேல், அதற்குப்பின் வருமாறு விளக்கமளிக்கிறார்: **தங்கத் தலை ராஜா நேபுகாத்நேச்சாரையே குறிக்கிறது என்றும், அவருக்குப் பிறகு, மற்ற ராஜ்யங்கள் எழும்பும் என்றும் தானியேல் விளக்குகிறார். ஆனால் அவைகள் எதுவும் அவ்வளவு மகிமை வாய்ந்ததாகவோ அல்லது சக்தி வாய்ந்த தாகவோ இருக்காது** (தானியேல் 2:38–40).

2–ஆம், 3–ஆம் அத்தியாயங்களுக்கு இடையிலான சரியான கால இடைவெளி நமக்குச் சொல்லப்படவில்லை. ஆனால், ராஜாவின் இதயத்தில் ஏதோ ஒன்று கிளர்ந்தெழுந்ததாகத் தெரிகிறது. ஒருவேளை அவர் தனக்குள், "நான் இறந்துவிடுவேன். எனக்குப் பிறகு வேறு யாராவது ஆட்சி செய்வார்கள். ஆனால், மக்கள் என் ஆட்சியை பொற்காலமாக நினைவில் கொள்ள வேண்டும் என்று நினைத்திருக்கலாம். பெருமை அல்லது பாதுகாப்பின்மையால் உந்தப்பட்டும், மக்கள் தன்னை முக்கியப்படுத்த வேண்டும் என்றும் அவர் ஒரு பெரிய தங்கச் சிலையை செய்து (ஒருவேளை அது அவரின் சிலையாகவும் இருக்கலாம்) அனைவரும் அதை வணங்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருக்கலாம்.

## (1) விடுதலைக்காக கட்டப்பட்டவர்கள்!

தானியேல் 3:21 **அப்பொழுது அவர்கள் தங்கள் சால்வைகளோடும் நிசார்களோடும் பாகைகளோடும் மற்ற வஸ்திரங்களோடும் கட்டப்பட்டு, எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள்.**

ராஜா அவர்களைக் கட்டியதாக நினைத்து, அவர்களைக் கட்டி, எரியும் சூளையின் மையத்தில் எறிந்து அவர்களின் சுதந்திரத்தைப் பறித்தார். எதிரி, தேவனுடைய திட்டத்தை தடம் புரளச் செய்தல், தாமதப்படுத்துதல் அல்லது அழித்தல் போன்ற தந்திரங்களால் வெற்றிகரமாகக் குலைத்துவிட்டதாக நம்பியிருக்க வேண்டும். ஆனால், தேவன்



**தேவனின் மேலான திட்டம்**

அதிலும் ஒரு மேலான திட்டத்தைக் கொண்டிருந்தார்.

ஒரு கணம், மூன்று எபிரெய மனிதர்களுக்கு அது முடிவுபோல் தோன்றியது. தேவன் உடனடியாகத் தலையிடாதபோது சாத்தான் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். பெரும்பாலும், நாம் ஜெபிக்கும்போது, தேவன் உடனடியாக பதிலளிக்கிறார். ஆனால், மற்ற நேரங்களில் அமைதி நிலவுகிறது. சில நேரங்களில் பல ஆண்டுகளாக இந்த அமைதி நம் நம்பிக்கையை அசைத்து, நம்மை விட்டுக் கொடுக்கத் தூண்டும்.

உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், ஜெபித்த பிறகு, காரியங்கள் சிறப்பாக மாறுவதற்குப் பதிலாக, மோசமாகிவிட்ட நேரங்களை நான் அனுபவித்திருக்கிறேன். எபிரெய சகோதரர்களின் கதையைப் பார்த்தால், அவர்கள் தைரியமாக தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்ட பிறகு, அக்கினி தீவிரமடைந்தது; ஏழு மடங்கு சூடாகியது.

அன்பு நண்பரே, ஒருவேளை நீங்கள் இன்று "ஆண்டவரே! இது ஏன் மோசமாகி விட்டது? நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஏன் இதை அனுமதித்தீர்?" என்று கேட்டுக் கொண்டிருக்கலாம்.

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

**எங்கள் முகவரி:**


**ECHO OF HIS CALL,**
10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India
Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org

ஆம், ஆண்டவர் அவர்கள் அக்கினியில் வீசப்படுவதைத் தடுத்திருக்கலாம்; அவர்கள் நுழைவதற்கு முன்பே தீப்பிழம்புகளை அணைத்திருக்கலாம். ஆனால், இவையெல்லாவற்றையும்விட அவர் இன்னும் ஒரு பெரிய காரியத்தைச் செய்தார். அவரே, அவர்களுக்காக அக்கினியில் காத்திருந்தார். அவர்களைத் தம்முடைய கரங்களில் ஏந்தத் தயாராக இருந்தார்.

அவர்கள் அக்கினிச் சூளையில் விழுந்தபோது, அவர்கள் நேராக தேவனுடைய நித்திய கரங்களில் விழுந்தார்கள் என்று நான் நம்புகிறேன். அவர் ஏற்கனவே அவர்களுக்கு முன்னால் சென்றிருந்தார். தேவன் எப்போதும் நமக்கு முன்னால் செல்கிறார். நம்மைப் பாதுகாக்க, அக்கினியில்கூட, முன்னால் நடந்து செல்கிறார். அக்கினிச் சூளையின் நடுவில் கூட, அவர் இருக்கிறார். நீங்கள் ஒருபோதும் தனியாக இல்லை. உங்களைப் பலப்படுத்தவும், உங்களைத் தாங்கவும் அவர் அங்கே காத்திருப்பார்.

தேவனுடைய அனுமதியின்றி, நம் வாழ்வில் எதுவும் நடக்காது. நமக்குத் தீங்கு விளைவிப்பதற்காக அல்ல, ஆனால், வரவிருக்கும் தலைமுறைகளுக்கு நம்மை ஜீவனுள்ள சாட்சிகளாகப் பயன்படுத்துவதற்காக நமக்குக் கடுமையான போராட்டக் காலங்களை தேவன் அனுமதிக்கிறார். நம் வாழ்க்கையும், சாட்சியும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் ஒரு மரபுரிமையை அடுத்த தலைமுறைகளுக்கு விட்டுச் செல்ல அவர் நம்மை அழைத்திருக்கிறார்.

## (2) விடுதலையில் நடத்தல்!

மூன்றுபேர்களை அக்கினியில் போடப்பட்டபோது, அவர்களின் கட்டுகள் அனைத்தும் அவிழ்க்கப்பட்டது. அவர்களது கைகளையும், கால்களையும் கட்டியிருந்த கயிறுகளும் அக்கினியில் எரிந்து போயின.



கர்த்தருடைய சந்நிதியில், அவர்கள் சுதந்திரமாக இருந்தனர்; அக்கினியின் மத்தியில், எவ்வித பாதிப்போ, சேதமோ இன்றி நடந்தனர்; தேவகுமாரன் அவர்களுக்கு அருகில் இருந்தார்.

**... இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது ...** தானியேல் 3:25 என்று தமிழ் வேதாகமத்தில், இந்த வசனம் அழகாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள் என்று சொல்லவில்லை. ஆனால், அவர்கள் உலாவிக் கொண்டிருந்தார்கள் என்ற அர்த்தத்தை இது கூறுகிறது. என்ன ஒரு காட்சி? தங்களை அழிக்க வடிவமைப்பட்ட இடத்திலேயே இந்த மனிதர்கள் சுதந்திரமாக நடமாடினர்.

அன்புள்ள சகோதர, சகோதரிகளே, நீங்கள் இப்போது நெருப்பின் நடுவில் இருப்பதைக் காணலாம். ஆனால், நீங்கள் தேவனது முன்னிலையில் இருக்கும் வரை, நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்கள். அவரால் எல்லா அடிமைத்தனங்களையும் உடைக்க முடியும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் சுதந்திரம் இருக்கிறது.

அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதும் என்னை மிகவும் ஆச்சரியப்படுத்துகிறது: அவர்கள் தங்கள் சிருஷ்டிகருடன் உலாவினார்கள்!

யோசித்துப் பாருங்கள் – நாம் எங்கே உலாவுவோம் அல்லது நிதானமாக நடப்போம்? பூங்காக்கள் அல்லது தோட்டங்களில் உலாவும்போது அமைதியாகவும், அவசரப்படாமலும், இயற்கையை ரசித்துக் கொண்டோ, நண்பர்களுடன் பேசிக் கொண்டோ எல்லா அழுத்தங்களையும் மறந்து நிதானமாய் உலாவுவோம் அல்லவா?

உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத் நேகோ ஆகியோர் அக்கினி சூளையின் மத்தியில் எவ்வித அழுத்தங்களும் இல்லாமல் உலாவி வருவதை! அவர்களுடைய கதை முடிந்தது என்று எதிரி நினைத்தான். ஆனால், கர்த்தர் அவர்களோடு இருக்கிறார் என்ற வல்லமையான சத்தியத்தை அவன் புரிந்து கொள்ள வில்லை

உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலையில் இருந்து உரக்கச் சொல்லுங்கள், தேவன் என்னோடு இருக்கிறார் என்று!

## (3) தீங்கு ஒன்றுமில்லை!

அவர்களுடைய கைகளும், கால்களும் கட்டப்படாமல் இருந்தது மட்டுமல்லாமல், அவர்கள் கர்த்தருடன் உலாவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் துளி அளவுகூட காயமடையவில்லை. தானியேல் 3:25 சொல்வது போல, ... அவர்களுக்கு காயம் இல்லை ...

அது எப்படி சாத்தியம்?

அதாவது அக்கினியின் எந்த தடயமும் இல்லை. தீக்காயங்கள் இல்லை. கொப்புளங்கள் இல்லை. புகையின் வாசனை கூட இல்லை. தேவன் அவர்களை முழுமையாக மூடினார். அவர்கள் ஒருபோதும் அக்கினியில் கால் வைத்ததில்லை என்பது போல் இருந்தது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE REACHING NATIONS
Diploma in Theology
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
உடனே அணுகவும் !
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2025 செப்டம்பர் 19 முதல் அக்டோபர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

### தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

**செப்டம்பர் 19** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்காக...

**செப்டம்பர் 20** ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்கள் அனைவரையும் ஆசீர்வதித்த கிருபைக்காக....

**செப்டம்பர் 21** ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **வேதாகமக்கல்வி** வளர்ச்சிகளுக்காக ...

**செப்டம்பர் 22** ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டதற்காக...

**செப்டம்பர் 23** ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

**செப்டம்பர் 24** ⇨ நமது ஆகஸ்டு மாதத்தின் தேவைகளை சந்தித்ததற்காக...

**செப்டம்பர் 25** ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்கள் 57வது ஆண்டில் அடியெடுத்து வைத்ததை ஆசீர்வதித்த கிருபைக்காக....

**செப்டம்பர் 26** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** புதிய மாணவர்களை கொடுத்து ஆசீர்வதித்து வருவதற்காக ...

**செப்டம்பர் 27** ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபையின் ஞாயிறு ஆராதனைகளில் வழங்கப்படும் தேவச்செய்திகளின் வல்லமைக்காக ...

**செப்டம்பர் 28** ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரி**க்கு புதிய மாணவர்களை கொடுத்து ஆசீர்வதித்து வருவதற்காக ...

**செப்டம்பர் 29** ⇨ அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பை நல்கும் களப்பணியாளர்களை ஆசீர்வதித்து வருவதற்காக...

**செப்டம்பர் 30** ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

**அக்டோபர் 01** ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக ...

**அக்டோபர் 02** ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊடக ஊழியத்தின் 5 நிமிட யூடியூப் செய்தியின் மூலம் எழும்பி வரும் சாட்சிகளால் எங்களை ஆசீர்வதித்த கிருபைக்காக ...

**அக்டோபர் 03** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழிக் கல்விமுறைகளைக்** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

### தேவனிடத்தில் ஜெபியுங்கள்

**அக்டோபர் 04** ⇨ வேதாகம ஆராய்ச்சிக்கான மாநாடுகளை தொடர்ந்து நடத்தி வருவதற்காக...

**அக்டோபர் 05** ⇨ தேசங்களின் சமாதானத்திற்காகவும், அமைதிக்காகவும்...

**அக்டோபர் 06** ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டி ...

**அக்டோபர் 07** ⇨ நமது பங்காளர்கள், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களை ஆசீர்வதிக்க வேண்டி...

**அக்டோபர் 08** ⇨ உலகெங்குமுள்ள அனைத்து மக்களும் நலத்துடன் பாதுகாப்பாக வாழ்ந்திட வேண்டி...

**அக்டோபர் 09** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** புது மாணவர் சேர்க்கைக்காக...

**அக்டோபர் 10** ⇨ நம்முடைய சுவிசேஷ அச்சகத்திற்காக...

**அக்டோபர் 11** ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நல்ல உடல் ஆரோக்கியத்திற்காக...

**அக்டோபர் 12** ⇨ நமது ஆலயத்திலுள்ள அனைத்து விசுவாசிகளையும் ஆசீர்வதிக்க வேண்டி...

**அக்டோபர் 13** ⇨ **அழைப்பின் எதிரொலியின்** வாலிப மற்றும் கள ஊழியங்களுக்காக...

**அக்டோபர் 14** ⇨ உலகில் பல்வேறு பகுதிகளில் நிலவும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி...


**அக்டோபர் 15** ⇨ உலகமெங்கும் களப் பணியாளர்களுக்கு தேவ பாதுகாப்பு கிடைத்திட ...

**அக்டோபர் 16** ⇨ அனைத்து நாடுகளுக்கும் தேவபயமுள்ள தலைவர்களை தந்து ஆசீர்வதிக்க வேண்டி...

**அக்டோபர் 17** ⇨ ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரநிலை மேம்படவேண்டி...

**அக்டோபர் 18** ⇨ இயற்கை பேரழிவுகளிலிருந்து உலக மக்களுக்கு தேவ பாதுகாப்பு கிடைக்க வேண்டி...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி



**நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்;**

அவர்கள் அக்கினிச் சூளைக்கு அழைத்துச் செல்லப்படும்போது சங்கீதம் 23 ஐப் பாடிக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று நான் கற்பனை செய்கிறேன். ஆம், **நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.** சங்கீதம் 23:4.

உண்மையில், தேவன் அவர்களுடன் இருந்தார்; அவரின் வாக்குத்தத்தங்களின்படி, ஆறுதல் அளிக்கவும், விடுவிக்கவும் காத்திருந்தார்.

## அவருடைய அருமையான வாக்குறுதிகளில் சில இங்கே:

**சகரியா 2:8 :**

**... உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்.**

**ஏசாயா 49:16 :**

**இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் ...**

**சங்கீதம் 91:11 :**

**உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.**

**சங்கீதம் 121:7 :**

**கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.**

**யோவான் 10:28:**

**நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை.**

அன்பு நண்பர்களே, நீங்கள் இன்று உங்கள் திராணிக்கு மேலான கடின போராட்டமான சூழ்நிலையில் இருந்தாலும், நீங்கள் அதிலிருந்து எந்தத் தீங்கும் இல்லாமல் வெளியே வருவீர்கள். கர்த்தரைப் பற்றிக் கொள்ளுங்கள். வழியே இல்லாத இடத்தில் அவர் ஒரு வழியை உருவாக்குவார்.

நீங்கள் ஒரு தவறான உறவில் சிக்கிக் கொண்டிருக்கலாம்; நிதி நெருக்கடியில் மூழ்கியிருக்கலாம்; கடுமையான உடல்நலப் பிரச்சினைகளில் போராடிக் கொண்டிருக்கலாம்; சட்டப் போராட்டத்தில் சிக்கிக் கொண்டிருக்கலாம் அல்லது ஒரு அன்புக்குரியவரை இழந்ததால் துக்கப்பட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால், இதை நினைவில் கொள்ளுங்கள். தேவன் உங்களோடிருக்கிறார்.

அவரது வாக்குத்தத்தங்களை உரிமை கொள்ளுங்கள். புயல் போன்ற சூழ்நிலையிலும் அவரைத் தொடர்ந்து துதித்துக் கொண்டே இருங்கள். மூன்று எபிரெய மனிதர்கள் அக்கினிச் சூளையிலிருந்து ஒரு சிறு பாதிப்புகூட இல்லாமல் வெளியே வந்தது போலவே, எத்தீங்கும் இல்லாமல் அவர் உங்களை அந்தச் சூழ்நிலையிலிருந்து வெளியே கொண்டு வருவார் அல்லது அதைத் தாங்கிக் கொள்ள உங்களுக்கு கிருபை தருவார்.

## (4) அக்கினிக்கு அதிகாரமில்லை!

தானியேல் 3:27 ... **அந்தப் புருஷருடைய சரீரங்களின்மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும், ...** இதன் பொருள் யாதெனில், நீங்கள் இருக்கும் எந்த சூழ்நிலைக்கும் உங்கள்மேல் எந்த அதிகாரமும் இல்லை என்பதாகும். அல்லேலூயா!

ராஜாவும், அவருடைய அதிகாரிகளும் நெருப்பு அவர்களை விழுங்கி விடும் என்று நம்பினர். ஆனால், உண்மையில் நடந்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அக்கினி அதன் பலன் மேல் அதிகாரம் செலுத்த முடியவில்லை. எபிரெய மனிதர்கள் தேவனுடைய வல்லமையால் சூழ்நிலையை மேற்கொண்டனர்.

நான் உங்களுக்கு கூறுவதாவது: நீங்கள் அதிகாரத்தைக் கொடுத்தாலொழிய, உங்களை மேற்கொள்ள சூழ்நிலைக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆகையால், உங்கள் பயம், வலி, நெருக்கடிக்கு உங்கள் கட்டுப்பாட்டை இழக்காதீர்கள். சூழ்நிலைக்கு உங்கள்மேல் ஆதிக்கம் செலுத்த அனுமதியளிக்காதீர்கள். நீங்கள் தேவனுடைய அதிகாரத்தை சுமக்கிறீர்கள். அக்கினி உண்மையானதாக இருக்கலாம். ஆனால், நான்காவது மனிதனுடன் நடப்பவர்களுக்கு எதிராக அது வல்லமையில்லாததாகி விடுகிறது.

## (5) தேவனுக்கு மகிமையைக் கொண்டு வந்தது!

நம் வாழ்வில் ஏற்படும் மகிழ்ச்சியான அல்லது வேதனையான எந்த ஒரு நிகழ்வும் தேவனுக்கு மகிமை கொண்டு வருவதையே நோக்கமாக கொண்டுள்ளது. ஆம், அது துன்பமோ, இழப்போ அல்லது அக்கினியாயிருந்தாலும்கூட.

அற்புதத்தைக் கண்ட பிறகு,

**... நேபுகாத்நேச்சார் வசனித்து: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின்**

தொடர்ச்சி 8-ம் பக்கம்.....


### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

# அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

## இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.




"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்


## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :




**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

# அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

## இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## தாழ்மையான ஊழியத்தை உயர்த்தும் தேவன்!

என்னுடைய ஆரம்ப நாட்களிலிருந்தே, தேவன் எனக்கு மக்களை மகிமையான சுவிசேஷத்தின் மூலம் சந்திக்க மிகுந்த ஆர்வத்தையும், மிகுந்த பாரத்தையும் கொடுத்தார். **... எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.** 1 கொரிந்தியர் 9:22. குறைந்தபட்சம் ஒவ்வொரு நாளும் ஒருவருக்காவது சுவிசேஷ பிரதிக் கொடுப்பதின் மூலமோ அல்லது தனிமையாய் கிறிஸ்துவின் அன்பை சொல்வதின் மூலமோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை சொல்ல வேண்டுமென்று ஒரு நாள் தீர்மானித்தேன்.

இன்னும் அந்த தீர்மானத்தை தொடர தேவன் எனக்கு உதவி செய்கிறார்.

1971–ம் ஆண்டிலிருந்து நான் தமிழ்நாடு அரசுக்காக வேலை செய்யும்போதே, வீட்டிலிருந்து அலுவகத்திற்கு போகும்போதும், திரும்பும் போதும் சுவிசேஷ பிரதிகளை வினியோகிக்கும் பழக்கம் கொண்டிருந்தேன். இந்த ஊழியத்தில் இருக்கும்போது, ஆயிரக்கணக்கான கிறிஸ்துவரல்லாதவரையும், சில தேவப்பிள்ளைகளையும் சந்திக்க முடிந்து, இதைத் தவிர, இந்த ஊழியத்தில் கிடைத்த தொடர்புகளின் மூலம் சென்னையில் சபை ஊழியத்தை என்னால் துவங்க முடிந்தது.

சுவிசேஷ பிரதிகள் எனக்கு கிடைப்பது கடினமாயிருந்த தினால், சுவிசேஷ பிரதிகளை அச்சடித்து நான் இலவசமாய் வினியோகிக்க அருகிலிருந்த அச்சகங்களை அணுகினேன். என்னுடைய ஊழியத்திற்கென்று சுவிசேஷ கைப்பிரதிகளை அச்சடிப்பதற்கு அச்சக உரிமையாளர்கள் விருப்பமின்மையுடைவர்க ளாய் இருந்தார்கள். இது என்னை அதிக தடவை சங்கடப்படுத்தியது.

இந்த எல்லா சூழ்நிலைகளிலும், ஊழியத்தை சிறிய அளவில் தொடர தேவன் உதவி செய்தார்.

பல சமயங்களில், பிறமத நண்பர்களுக்கு சுவிசேஷ பிரதிகளை கொடுக்கும்போது சரீர பிரகாரமாய் தாக்கப்பட்டேன். ஆனால், தேவன் தீய சக்திகளிடமிருந்து என்னை காப்பாற்றி ஊழியத்தில் முன்னோக்கி செல்ல உதவி செய்தார்.


இப்போது, நான் ஊழியம் செய்த என் தேவன் தெருக்களிலும், சந்தைகளிலும் சுவிசேஷப் பிரதிகளை வினியோகிக்கும் என் தாழ்மையான ஊழியத்தைக் கனப்படுத்தி, போதுமான எண்ணிக்கையில் கைதேர்ந்த ஊழியங்களையும், நவீன அச்சு இயந்திரங்களையும் மற்றும் கட்டிடங்களையும் கொடுத்து பெரிய "சுவிசேஷ எழுத்து ஊழியத்தினால்" என்னை ஆசீர்வதித்தி ருக்கிறார். இப்போது நீங்கள் அறிந்தபடி, தேவக்கிருபையினாலே இந்த ஊழியத்தில் பல தேச மக்களை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நாங்கள் 16 மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுவதின் மூலம் சந்திக்க முடிகிறது.

அதாவது, ஆங்கிலம், தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி, மராத்தி, கன்னடம், வங்காளம், குஜராத்தி, ஒரியா, அஸ்ஸாமி, பஞ்சாபி, உருது, நேப்பாளி, சிங்களம் மற்றும் ஆப்பிரிக்க மொழி. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் எங்கள் தலைமைச் சபையில் 5 மொழிகளில் அதாவது, ஆங்கிலம், தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் இந்தியில் ஆராதனைகளும் நடத்தப்படுகின்றது.

இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்க்கையிலும் பெரிய காரியங்களை செய்வார். **கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.** சங்கீதம் 126:5

*************

... 6–ம் பக்கத் தொடர்ச்சி



**நேபுகாத்நேச்சார் இராஜாவின் கட்டளை**

**கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக் கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார். ஆதலால், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்.** தானியேல் 3:28–29.

தேவன் அக்கினியைப் பல மடங்கு அதிகரிக்க ஏன் அனுமதித்தார்?

முதலாவதாக, விசுவாசத்தில் அதன் நடுவில் நடக்க அவர் உங்களை நம்புகிறார்.

இரண்டாவதாக, அவர் உங்கள் சாட்சியைப் பயன்படுத்தி அவருடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டு வருவார்.

எனவே, என் சகோதரனே, என் சகோதரியே, நீங்கள் இப்போது கடந்து செல்லும் கடினமான பாதை வீண் அல்ல என்று உற்சாகமடையுங்கள். அது தேவனுக்கு மகிமையைக் கொண்டு வரும். மேலும், நீங்கள் இந்த அக்கினியிலிருந்து அவருக்கு ஒரு வல்லமையுள்ள, சுத்தகரிக்கப்பட்ட, பிரகாசமான பாத்திரமாக வெளிப்படுவீர்கள்.

### (6) பதவி உயர்வு!

சிலநேரங்களில் நமக்குள் நாமே கேட்டுக் கொள்கிறோம், "எல்லா மகிமையையும், எல்லா கனத்தையும் தேவன்

ஒருவரே பெற்றுக் கொள்வார் எனில் எனக்கு என்ன பங்கு உள்ளது? இதனால் எனக்கு என்ன பயன்?" என்று.

ஆனால், தானியேல் 3–ல் உள்ள கதையின் மீதியை நாம் படிக்கும்போது, தேவன் தன்னை உண்மையாக நம்புபவர்களுக்கு வெகுமதி அளிப்பவர் என்ற ஒரு அழகான உண்மையைக் காண்கிறோம். சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ ஆவிக்குரிய உலகில் மதிக்கப்பட்டது மட்டுமல்லாமல், பூமியிலும் வெகுமதி பெற்றனர்.

**பின்பு ராஜா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்.** தானியேல் 3:30.

சாத்தான் அவர்களின் அழிவைத் திட்டமிட்டிருந்தான். அவர்களின் வாழ்க்கையையும், ராஜாவின் தயவையும், அவர்களின் ஊழியத்தையும், விசுவாசத்தையும், தேவனுடைய திட்டத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்து, இறுதியில் அவர்களுடைய வாழ்க்கையையும் முடிவுக்குக் கொண்டு வந்து, இந்த சோதனையைக் கண்ட மற்றவர்களின் விசுவாசத்தையும் அழித்து, தேவனுடைய ராஜ்யத்தின் விரிவாக்கத்தையும் தடை செய்ய திட்டமிட்டிருந்தான்.

ஆனால் அது எதுவும் நடக்கவில்லை.

அதற்கு பதிலாக, தேவன் எதிரியின் திட்டத்தைத் தலைகீழாக மாற்றி, பூமியெங்கும் தனது ராஜ்யத்தை விரிவுபடுத்தவும், பலப்படுத்தவும் சூழ்நிலையைப் பயன்படுத்தினார்.

அக்கினி என்ன சாதித்தது என்பதைப் பாருங்கள்:

அக்கினி தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றியது. அது தேவனுக்கு மகிமையைக் கொண்டு வந்தது. அது அவர்களின் விசுவாசத்தை மட்டுமல்ல, மற்ற யூதர்களின் விசுவாசத்தையும், மேலும் ராஜாவைப் போன்ற யூதரல்லாதவர்களின் விசுவாசத்தையும் கூட பலப்படுத்தியது. அது அவர்களுக்கு தேவனுடைய பார்வையிலும், மனிதனுடைய பார்வையிலும் தயவைத் தந்தது. அது அவர்களின் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வரவில்லை; மாறாக, அது அவர்களுக்கு ஒரு புதிய தொடக்கமான புதுப்பிக்கப்பட்ட நோக்கத்தையும், தரிசனத்தையும், பதவியையும் கொடுத்தது. **சத்துரு தீமைக்காகத் திட்டம் பண்ணினதை தேவன் அதை நன்மையாக முடியப் பண்ணினார்** (ஆதியாகமம் 50:20) என்பதை இது நிரூபித்தது.

ஒரு காலத்தில் ஒரு தங்கச் சிலையை வணங்கும்படி அனைவருக்கும் கட்டளையிட்ட ராஜா, இஸ்ரவேலின் தேவனுடைய ஏகாதிபத்தியத்தை பகிரங்கமாக அறிவித்தார்:

**... இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்.** தானியேல் 3:29.

## (7) வைராக்கியம் – ஒரு மரபுரிமையை விட்டுச் செல்வது!

இறுதியாக, இந்த மூன்று எபிரெய மனிதர்கள் ஒரு சக்தி வாய்ந்ததும், நீடித்ததுமான மரபுரிமையை விட்டுச் சென்றனர். அதுதான் 2025ஆம் ஆண்டில் இன்றும் நம்மிடம் பேசும் அசைக்க முடியாத விசுவாசத்தின் மரபுரிமையாகும்.

இனிவரும் தலைமுறைகளுக்கு ஒரு சாட்சியாக நிற்கும்படி, தேவன் அவர்களை நெருப்புக்குள் செல்ல அனுமதித்தார். அவர்களுடைய வாழ்க்கையின் இன நிகழ்வு கர்த்தருக்காக அதே வைராக்கியத்துடன் வாழ அறைகூவல் அளித்து, ஊக்குவிக்கிறது வைராக்கியம்.

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது. ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது ... தானியேல் 3:17–18 என்று அவர்கள் தைரியமாக அறிவித்தனர்.

கர்த்தருக்காக அவர்கள் கொண்டிருந்த துணிச்சலையும், உறுதியையும் பாருங்கள்! அவர்கள் தங்கள் விசுவாசத்தை சமரசம் செய்வதற்குப் பதிலாக மரணத்தை எதிர்கொள்ளத் தயாராக இருந்தனர்.

காரியங்கள் நம் வழியில் நடக்காத போது நாம் எத்தனை முறை சோர்வடைகிறோம்? ஆனாலும், இந்த இளைஞர்கள், தங்களது அசைக்க முடியாத பக்தியால், தங்கள் சொந்த நம்பிக்கையை மட்டுமல்ல, நமது நம்பிக்கையையும் பலப்படுத்தியுள்ளனர்.

பிரியமான நண்பரே! தோல்வியின் மத்தியிலும், நோய்களின் மத்தியிலும், குடும்பப் போராட்டங்களின் மத்தியிலும், உடல்நலச் சவால்களின் மத்தியிலும், தொழில்முறை அழுத்தங்களின் மத்தியிலும், தனிப்பட்ட மனவேதனையின் மத்தியிலும், மீண்டும், மீண்டும் ஏமாற்றத்தின் மத்தியிலும், உடைந்துபோன நேரங்களிலும் மிகுதியான ஆசீர்வாதத்தின் மத்தியிலும் கூட நீங்கள் இன்னும் கர்த்தரைச் சேவிக்க முடியுமா?

**பின்வாங்கிப் போகாதீர்!**



**அவர் நமக்கு அருகில் இருக்கிறார். அவருடைய கரங்கள் எப்போதும் திறந்திருக்கும்.**

அவர் உங்களுக்காகக் காத்திருக்கிறார். அதனால்தான், இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். அவர் நமக்காகப் பரிந்து பேச மட்டுமல்ல, அவர் நம்மைப் புரிந்து கொள்ளவும் முடியும். அவர் நம்மிடமிருந்து தொலைவிலோ அல்லது அலட்சியமாகவோ இல்லை. அவர் நமக்கு அருகில் இருக்கிறார். அவருடைய கரங்கள் எப்போதும் திறந்திருக்கும்.

எனவே, அவரைப் பற்றிக் கொள்ளுங்கள்.

அவரை வைராக்கியத்துடன் சேவியுங்கள்.

ஒரு மரபுரிமையை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லும் வாழ்க்கை வாழுங்கள்.




**உடனடி தேவை**



1. கம்ப்யூட்டர் பணியாளர்கள் (தட்டச்சு அனுபவத்துடன்)
2. பிரிண்டிங் பிரஸ் உதவி ஆப்ரேட்டர்கள்

தொடர்புக்கு: (+91) 98412 71858, E.mail: sam@echoofhiscall.org


**அறிவிப்பு**

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.* – **ஆசிரியர்**

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

### YouTube (யூடியூப்)

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி** (**ECHO OF HIS CALL**) **யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
**E.mail : sam@echoofhiscall.org**

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**வருட சந்தா ரூ. 100/–** **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram**, etc. மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/24-26
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS Patrika Channel"
on 28th AUGUST 2025
If un-delivered please return to:
**ECHO OF HIS CALL (TAMIL)**
P.O. Box No. 2957, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**